வாக்குமூலம்

குற்றவியல் நீதிமன்றம், இராமநாதபுரம்

வழக்கு எண் MCOP. No. 42/2019

வழக்கு சாட்சி – எ.ம.சா. 1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | :: திருமதி. மஞ்சுளா | தொழில் | :: துணை உதவியாளர் |
| த/ பெயர் | :: ராமலிங்கம் | வயது | :: 31 |
| கிராமம் | :: திருச்சி | | |
| தாலுகா | :: | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of 24.02.2026.

**முதல் விசாரணை** (நேரம் : நண்பகல் 12.50 மணி)

நான் 2ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் சட்டப்பிரிவில் உதவி அதிகாரியாக பணியாற்றுகிறேன். என்னுடைய சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையெழுத்துகள் என்னுடையவைதான். என்னுடைய தகவலின் அடிப்படையில் தான் அவை தயார் செய்யப்பட்டது. எங்கள் நிறுவனத்தை பொறுத்து மனுவை தள்ளுபடி செய்யுமாறு வேண்டுகிறேன்.

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை –**

விபத்து சமயம் எங்கள் நிறுவன காப்பீடு சான்று அமலில் இருந்தது என்றால் சரிதான். 1ம் எதிர்மனுதாரர் மற்றும் மனுதாரருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்பதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. அவர்களுக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் அது சம்பந்தமாக சம்பந்தப்பட்ட RTO அலுவலக அதிகாரிகளை விசாரித்ததால் தான் தெரியவரும் என்றால் சரியல்ல. விபத்து இழப்பீடு கொடுப்பதில் இருந்து எங்கள் நிறுவனம் தப்பித்துக்கொள்ள வேண்டும் என்பதற்காக அவ்வாறு அவர்களுக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை

J JEYA SUTHAHAR

Digitally signed by J JEYA SUTHAHAR
Date: 2026.02.24 17:42:01 +0530

என்று பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. விபத்து சமயம் எங்கள் நிறுவன காப்பீடு முறையாக அமலில் உள்ளதால் நாங்கள் தான் மனுதாரருக்கு இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டுள்ளோம் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை – இல்லை.**

சாட்சி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்குப் படித்து காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

J JEYA SUTHAHAR

Digitally signed by J JEYA SUTHAHAR
Date: 2026.02.24 17:42:07 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,
இராமநாதபுரம்.